# செய்தி வெளியீடு எண்: 642 நாள்: 26.10.2012

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்** 26.10.2012 **அன்று காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் சீருடைப் பணியாளர்களுக்கான "உங்கள் சொந்த இல்லம்" திட்ட வீடுகளுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை**

சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டுவதிலும், மக்களின் துன்பங்களை துடைப்பதிலும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு வரும் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கும், மற்றும் அனைத்து சீருடைப் பணியாளர்களுக்கும் சொந்த இல்லம் கட்டித் தரப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், முதற்கட்டமாக இன்று மேலக்கோட்டையூரில் 2,673 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்து, உங்களிடையே உரையாடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காவல் பணி என்பது கடினமானப் பணி. சட்டம் ஒழுங்கினைப் திறம்பட பராமரிப்பது; குற்றங்கள் நிகழாமல் தடுப்பது; நிகழ்ந்துவிட்ட குற்றங்களை புலனாய்வு செய்து குற்றவாளிகளை கண்டுபிடிப்பது; அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தருவது; போன்ற கடினமானப் பணிகளை காவல் துறை மேற்கொண்டு வருகிறது.

ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டுமானால், அதற்கு இன்றியமையாததாக விளங்குவது காவல் துறையின் பணி ஆகும். மனித சமுதாயத்தை நெறிப்படுத்த வகுக்கப்படும் சட்டங்களை நிலைநாட்டுபவர்கள் காவல் துறையினர்.

ஒரு நாடு நல்லதொரு பொருளாதார வளர்ச்சியினை, சமுதாய மேம்பாட்டினை அடைய வேண்டுமானால் அங்கு அமைதி நிலவ வேண்டும். ஆரோக்கியமான சூழ்நிலை உருவாக வேண்டும். இந்த அரிய பணியினை ஆற்றி வரும் துறையாக காவல் துறை விளங்குகிறது.

பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் அளிப்பதோடு மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரமும், மன நிறைவும் அளிக்கும் மகத்தான பொறுப்பும் காவல் துறையிடம் தான் இருக்கிறது.

இதே போன்று, புயல், மழை, வெள்ளம், நில நடுக்கம், தீ விபத்துக்கள் போன்ற இயற்கை இடர்பாடுகளினால் மக்கள் அல்லல்படும் போது அவர்களை அரவணைக்கும் கடமையினை தீயணைப்புத் துறையினர் ஆற்றி வருகின்றனர்.

குற்றவியல் நீதி முறையின் அங்கமாக விளங்கும் சிறைத் துறைப் பணியாளர்கள் சிறைக் கைதிகளை சீர்திருத்துவது, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது, மீண்டும் குற்றம் இழைக்கா வண்ணம் அவர்களை நல்வழிப்படுத்துவது போன்றவற்றை லட்சியமாகக் கொண்டு பணியாற்றி வருகிறார்கள்.

சீருடைப் பணியாளர்களின் இன்றியமையாத் தன்மையை உணர்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், காவல் துறையினருக்கு வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்

கழகத்தை ஏற்படுத்தினார். இந்தக் கழகம் காவல் துறையினருக்கு பல வீடுகளைக் கட்டித் தந்தது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினை அடுத்து தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மூடப்பட்டது. பின்னர் 1991 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் இதற்கு மீண்டும் புத்துயிர் கொடுத்தேன். இதனையடுத்து, காவல் துறை பணியாளர்களுக்கான வீட்டு வசதிப் பணிகள் மும்முரமாக செயல்படத் துவங்கின.

இது மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பணியினை மேற்கொண்டு வரும் சீருடைப் பணியாளர்களின் நலன்களை காக்கும் வகையில், அவர்களுக்கென மானிய விலையில் பொருட்களை வழங்கும் வகையில் சிறப்பு அங்காடிகளை அமைத்ததுடன், அவர்களுக்கு வழங்கப்படும் இடர்ப்படி, உணவுப்படி ஆகியவற்றையும் உயர்த்தி வழங்கியுள்ளேன். காவல் துறை பணியாளர்களின் குழந்தைகளை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களின் மேற்படிப்பிற்கான கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்கியுள்ளேன். காவல் துறை பணியாளர்கள் பணியில் இறக்க நேரிட்டால் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கியுள்ளேன்.

இது தவிர, காவல் துறையை நவீனப்படுத்தும் வகையிலும்; வலிமைப்படுத்தும் வகையிலும்; அதி நவீன ஆயுதங்களை வாங்குதல்; காவல் நிலையங்களை புதுப்பித்தல்; புதிய வாகனங்களை வாங்குதல்; புதிய காவல் நிலையங்களை தொடங்குதல் போன்றவற்றிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறேன். தமிழகத்தில் மொத்தம் உள்ள 1,12,363 காவல் பணியாளர்களில் 50,424 பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், 7,526 பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. அனைவருக்கும் குடியிருப்பு வசதி செய்து தருவதற்கான கொள்கை முடிவையும் எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகரித்து வரும் மக்கள் தொகை, அதனால் ஏற்படும் சிக்கல்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், நவீனத் தொழில்நுட்பம், ஆகியவை சீருடைப் பணியாளர்களுக்கு கடுமையான பிரச்சனைகளை உருவாக்குகின்றன. தற்போது அவர்களின் பணி சிக்கலானதாகவும், சிரமமானதாகவும் மாறியிருக்கிறது.

இருப்பினும், தமிழகத்தில் “அமைதி” தொடர்ந்து நிலைநாட்டப்பட வேண்டும் என்ற ஒரே லட்சியத்துடன் காவல் துறையினர் பணியாற்றி வருகின்றனர். எந்த ஒரு குறிக்கோளினை அடைவதற்கும் லட்சியம் மிகவும் அவசியம்.

“வாழ்க்கையில் லட்சியம் கொண்டிருப்பவன் ஆயிரம் தவறுகள் செய்தால், லட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான்” என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஓர் ஊரில் ஓர் ஆசிரமம். அந்த ஆசிரமத்தை சுற்றி ஏராளமான செடி, கொடிகளும், மாமரங்களும் இருந்தன. அந்த ஆசிரமத்தைக் கடந்து சென்றால் அங்கே ஒரு பள்ளிக்கூடம்.

தினமும் அந்த ஆசிரமத்தின் வழியாகத்தான் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வார்கள். காலையில் மாணவர்கள் அந்த வழியாக பள்ளிக்குச் செல்வதையும்; மாலையில் வீடு திரும்புவதையும் ஒரு பெரியவர் கவனித்துக் கொண்டிருந்தார்.

அந்தப் பெரியவருக்கு ஓர் ஆச்சரியம்!

மாணவர்கள் காலையில் அந்த வழியாகப் போகிற போது அங்கே இருக்கும் மாமரங்களைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. ஒழுங்காகப் போவார்கள்.

ஆனால், மாலையில் திரும்புகிற போது அப்படி இல்லை. அவர்களுடைய குணம் முற்றிலும் மாறிவிடும். ஆளுக்கொரு கல்லைக் கையில் எடுத்துக் கொள்வார்கள். மாம்பழங்களை குறி வைத்து கற்களை எறிவார்கள். பழங்கள் கீழே விழுந்ததும் அதை எடுத்துக் கொள்வார்கள். ஒரே ஆட்டமும், பாட்டமுமாக இருக்கும்.

காலையில் ஒழுங்காகப் பள்ளிக்குப் போகும் மாணவர்கள் மாலையில் மட்டும் ஏன் இப்படி குறும்பு செய்கிறார்கள் என்று யோசிக்க ஆரம்பித்தார் அந்தப் பெரியவர்.

ஒரு நாள் ஒரு மாணவனைக் கூப்பிட்டார்.

அந்த மாணவனிடம் "தம்பி, காலையில் ஒழுங்காக அமைதியாகப் போகிறீர்கள். மாலையில் மட்டும் இப்படிக் கல் எறிந்து குறும்பு செய்கிறீர்களே? ஏன்? என்று கேட்டார்" அந்தப் பெரியவர்.

அதற்கு அந்தச் சிறுவன், "காலையிலே நாங்கள் சரியான நேரத்திற்கு பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். பாடங்களை படிக்க வேண்டும். ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும். இல்லையென்றால், ஆசிரியரிடம் திட்டு வாங்க வேண்டும், உதை வாங்க வேண்டும். ஆனால், மாலையில் அப்படி இல்லை. வீட்டுக்கு எப்பொழுது வேண்டும் என்றாலும் செல்லலாம். அதனால் தான் குறும்புகள் செய்கிறோம்" என்றான்.

இதைக் கேட்ட பிறகு தான் அந்தப் பெரியவருக்கு ஓர் உண்மை தெரிய வந்தது. இந்த மாணவர்கள் காலையில் இந்த வழியாகப் போகிற போது, ஒரு குறிக்கோளுடன் செல்கிறார்கள். அதனால் எந்தக் குறும்பும் செய்வதில்லை. ஆனால், மாலையில் திரும்புகிற போது அந்தக் குறிக்கோள் இல்லாததன் காரணமாக அவர்கள் குறும்பு செய்கிறார்கள் என்பது புரிந்தது.

காலையில் குறிக்கோளுடன் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் போல, அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் அனைத்து நேரங்களிலும் பணியாற்றுபவர்கள் நம்முடைய காவல் துறையினர். ஒரு மாநிலத்தின் காவல் துறை உயர்ந்த குறிக்கோளுடன் செவ்வனே பணியாற்றுவது என்பது அந்த நாட்டை ஆளும் தலைவரின் தலைமைப் பண்பைப் பொருத்தே அமையும். எனவே தான், தமிழகக் காவல் துறையினர் தற்போது உயர்ந்த குறிக்கோளுடன் செயல்பட்டு வருகின்றனர்.

அரசு ஊழியர்கள் அனைவருக்குமே 24 மணி நேரப் பணி என்பது பொருந்தும் என்றாலும், வழக்கமாக அலுவலக நேரத்திலேயே அவர்களுடைய பணிகளை அவர்களால் முடிக்க இயலும். மேலும், ஒரு சில மேம்பாட்டுப் பணிகளை, நிவாரணப் பணிகளை அவர்கள் செய்தால் அதற்குரிய பாராட்டு அரசு ஊழியருக்கு கிடைக்கிறது. உதாரணமாக, வறுமையில் வாடும் முதியோருக்கு, குடும்ப ஓய்வூதியத்தை ஓர் அரசு ஊழியர் பெற்றுத் தருகிறார் என்றால் அதற்கான பாராட்டு அவருக்கு கிடைக்கிறது. அந்தப் பலனைப் பெற்றவர் நன்றி தெரிவிக்கிறார். இதன் காரணமாக பணியில் திருப்தி ஏற்படுகிறது. பலன் பெற்றவரும் மகிழ்ச்சியடைகிறார். பலன் பெற்றுத்தர காரணமாக இருந்தவரும் மகிழ்ச்சியடைகிறார்.

ஆனால், காவல் துறையினரின் நிலை இதிலிருந்து முற்றிலும் மாறுபடுகிறது. காவல் துறையினரைப் பொறுத்த வரையில் குறிப்பிட்ட மணி நேரப் பணி என்பது எட்டாக் கனியாகவே விளங்குகிறது. சட்டம் ஒழுங்கினைக் காக்கும் பொருட்டும், குற்றவாளிகளை தேடும் பொருட்டும் பணி நிமித்தமாக பல நாட்களில் தங்கள் குடும்பங்களை விட்டு வெளியூருக்கு செல்லக் கூடிய நிலைமை காவல் துறையினருக்கு ஏற்படுகிறது. சில சமயங்களில் குடும்பத்தை நினைத்துப் பார்க்கக் கூட முடியாத சூழ்நிலை அவர்களுக்கு ஏற்படுகிறது. காவல் துறையினரால் பயனடைந்தவர் காவல் துறையின் பணியினை பாராட்டினால், அதனால் பாதிக்கப்படுபவர் வசை பாடுகிறார். எடுத்துக்காட்டாக, நில அபகரிப்பு வழக்கில், நிலத்தை அபகரித்தவர் மீது நடவடிக்கை எடுத்து, நிலத்தை உரிமையாளரிடம் மீட்டுக் கொடுத்தால், நிலத்தின் உரிமையாளர் காவல் துறையை பாராட்டுகிறார். அதே சமயத்தில், நிலத்தை அபகரித்தவர், காவல் துறை பொய் வழக்கு போட்டுவிட்டதாக காவல் துறையை சாடுகிறார். சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், நன்றி பாராட்டப்படாத பணியாக, அதாவது thankless job– ஆக காவல் துறை பணி விளங்குகிறது.

இப்படி குடும்பத்தைப் பிரிந்து, சட்டப்படி எடுக்கும் நியாயமான நடவடிக்கைக்குக் கூட வசைமாரிகளைப் பெற்றுக் கொண்டு, இரவு பகல் பாராமல், லட்சியத்துடன் ஓய்வில்லாமல், பணியாற்றும் காவல் துறையினர், ஓய்வு பெற்ற பிறகு அமைதியான சூழலில் மன நிம்மதியுடன் வாழ வேண்டும் என்பதன் அடிப்படையில் தான், “உங்கள் சொந்த இல்லம்” திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று நான் அறிவித்தேன். அந்த அறிவிப்பிற்கிணங்க, அந்தத் திட்டத்தை தொடங்கி வைக்கும் வகையில் இன்று இங்கே 2,673 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டியதுடன் 36 சீருடைப் பணியாளர்களுக்கு வீடு ஒதுக்கீட்டு ஆணைகளை இந்த மேடையிலேயே நான் வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கும் இந்த ஒதுக்கீட்டு ஆணைகள் இன்றே வழங்கப்படும்.

“கல்யாணம் பண்ணிப் பார்! வீட்டைக் கட்டிப் பார்!” என்று சொல்வார்கள். அதாவது வீடு கட்டுவது என்பது சாதாரண காரியம் அல்ல.

சொந்தமாக ஒரு வீட்டை கட்டியே தீர வேண்டும் என்ற குறிக்கோளுடன் வீடு கட்டிக் கொண்டு இருந்தார் ஒரு பெரியவர்.

அந்தப் பெரியவரிடம் சென்று “வீடு கட்டும் வேலைகள் நன்றாக நடக்கிறதா ?” என்று கேட்டார் ஒரு விவசாயி.

அதற்கு அந்தப் பெரியவர், ‘‘ஏதோ கட்டிக் கொண்டிருக்கிறேன். ஆனால், ரொம்ப கஷ்டமாக இருக்கிறது’’ என்றார்.

உடனே அந்த விவசாயி, “அது தான் சொந்த வீடு கட்டிக்கிட்டு இருக்கீங்களே” என்றார்.

அதற்கு அந்தப் பெரியவர், “கடன் வாங்கித்தான் கட்டுகிறேன். முதலில் நிலம் வாங்க கடன் வாங்கினேன். அடுத்து, கொஞ்சம் கடன் வாங்கி அதில் அஸ்திவாரம் போட்டேன். அதற்குப் பிறகு கடன் வாங்கி இடுப்பளவு சுவர் எழுப்பினேன். அப்புறம் கொஞ்சம் கடன் வாங்கினேன். இப்போது கழுத்தளவுக்கு உயர்ந்துவிட்டது,’’ என்று சொல்லிக் கொண்டே போனார்.

உடனே அந்த விவசாயி, ‘‘இப்ப எந்தளவுக்கு உயர்ந்திருக்கிறது ?’’ என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெரியவர், ‘‘தலைக்கு மேல் போய்விட்டது’’ என்றார்.

“வீடா ?” என்று கேட்டார் அந்த விவசாயி.

“இல்லை, கடன்” என்றார், அந்தப் பெரியவர்.

எனது தலைமையிலான இந்த அரசின் நடவடிக்கை மூலம் சீருடைப் பணியாளர்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறியிருக்கிறது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் எந்த வித லாப நோக்கமும் இல்லாமல் குறைந்த செலவில் காவல் துறையினருக்கு இந்தப் பணியினை செய்ய இருக்கிறது. இதன் மூலம் “தலைக்கு மேல் கடன்’’ என்பதற்குப் பதிலாக “தலைக்கு மேல் வீடு’’ என்ற நிலை காவல் துறையினருக்கு உருவாகும்.

இந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே செயல்படுத்தப்பட்டு அனைத்து சீருடைப் பணியாளர்களும் தங்கள் பணிக் காலத்திலோ அல்லது பணிக் காலத்திற்குப் பிறகோ சொந்த இல்லத்தில் வாழுகின்ற நிலை நிச்சயம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

*******

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**